Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20150201T

**இலங்கை பாராளுமன்ற பணியாளர்கள் தங்கள் தொகுதிகளிற்கு சிறப்பாக சேவையாற்றுவதற்கான பயிற்சிக்கு அமெரிக்கா ஆதரவளிக்கின்றது.**

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிமக்களின் கரிசனைகளை செவிமடுத்து அவற்றிற்கு தீர்வுகாண்பது குறித்து அமெரிக்காவின் உதவியுடன் ஜனவரி 28-29 ம் திகதிகளில் இடம்பெற்ற செயலமர்வில் இலங்கை பாராளுமன்றத்தின் 50 ஆராய்ச்சி அதிகாரிகள் கலந்துகொண்டனர்,இந்த பயிற்சி தமிழிலும் சிங்களத்திலும் இடம்பெற்றது,இதுஇலங்கை பாhhளுமன்றம் தான் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களிற்கு சிறப்பாக பணியாற்றுவதற்கு உதவுவதற்காக அமெரிக்காவின் சர்வதேசஅபிவிருத்திக்கான முகவர் அமைப்பு முன்னெடுத்துள்ள 73 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்தின் ஒரு பகுதியாகவே முன்னெடுக்கப்படுகின்றது.

பாராளுமன்ற பணியாளர்களின் திறனை அதிகரிப்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பாக பணியாற்றுவதற்கு உதவியாக அமையும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்தார்.இது நல்லாட்சியின் கொள்கைகளை மேலும் பலப்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் இடம்பெற்ற பயிற்சிகள் பாரளுமன்ற சீர்திருத்தம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது தொடர் பயிற்சியாகும்,நிதிதிட்;டமிடல்,வரவுசெலவுதிட்டம்,பொதுமக்கள் தொடர்பாடல்,தொழில்துறைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாராளுமன்ற பணியாளர்களிற்கு பயிற்சி வழங்கப்பட்டது.

###